IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 212/2012
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மூர்த்தி | Caste | : | |
| Father Name | : | முருகேசன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July, 2025.

குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆன உயில் எந்த தேதி மாதம் மற்றும் வருடத்தில் எழுதப்பட்டது என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. மேற்படி உயிலை எழுதிய நபர் யார் என்றால் எனக்கு தெரியாது. சாட்சி கையொப்பம் போட்டவர்களின் ஊர் தெரியும். பெயர் தெரியாது. மேற்படி லத்தேரி மற்றும் பி.என். பாளையம் என்ற ஊரை சார்ந்தவர்கள். எந்த தேதியில் உயில் எழுதுவதற்கு அதற்குண்டான நபரை பார்த்தார்கள் என்றும் எந்த தேதியில் பத்திரம் பதிவு செய்தார்கள் என்றும் எனக்கு ஞாபகமில்லை.

2. மேற்படி உயில் எழுதும்போது என் தந்தைக்கு சுமார் 70 அல்லது 75 வயது இருக்கும். உயில் எழுதும்போது என் தந்தை உடம்பு சரியில்லாமலும் மற்றும் எந்த சூழ்நிலையில் இருக்கிறோம் என்று தெரியாமல் உயிலை எழுதினோம் என்று சொன்னால் சரியல்ல. நல்ல மனநிலையில் இருந்தார். உயில் எழுதிய பிறகு சுமார் 10 வருடம் உயிருடன் இருந்தார். என் தந்தை இறந்த தேதி ஞாபகமில்லை ஆனால் 2007 அல்லது 2008 இருக்கும் என்று நினைக்கிறேன்.

3. என்னுடைய தந்தையான முருகேச மந்திரியின் முதல் மனைவியின் வாரிசுகள் தான் இவ்வழக்கின் வாதிகள் என்று சொன்னால் சரியல்ல. முதல் மனைவியே என்னுடைய அம்மாதான். வாதிகளும் முருகேச மந்திரியும் ஒரே

வீட்டில்தான் வசித்தார்கள் என்பதற்கு ரேஷன் கார்டும் மற்றும் உழவர் பாதுகாப்பு அட்டை ஆகியவை உள்ளது என்று சொன்னால் அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. முருகேச மந்திரி வியாபாரம் செய்கின்ற வரையில் வாதி ராஜா வீட்டில்தான் இருந்தார் என்றாலும் அதன்பிறகு தான் நான் அழைத்து வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டில் தான் இருந்தார்.

4. தாவா சொத்தானது என்னுடைய தந்தையின் தனிப்பட்ட சொத்து அல்ல என்றாலும் அது பூர்வீக சொத்து என்பதாலும் வாதிகளுக்கு வழக்கு சொத்தில் பாகம் உள்ளது என்று சொன்னால் என்னுடைய பாட்டியின் பெயரில் தான் தாவா சொத்து முதலில் இருந்தது, பிறகு என் தந்தையார் பெயருக்கு மாற்றப்பட்டு பிறகு அவர் என்னுடைய மகனுக்கு கார்டியனாக என்னை நியமித்து உயில் எழுதி வைத்தார்.

5. மேற்படி என்னுடைய மகனின் பெயரில் உள்ள பட்டாவை யார் எடுத்து வந்து கொடுத்தார் என்றால் மணியக்கார் கொடுத்தார். இந்த வழக்கில் மேற்படி பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. உயிலானது 31.03.2010 அன்று எழுதப்பட்டது என்றாலும் அவர் காலமான தேதி 12.01.2011 என்றாலும் அவர் 8 மாதம் தான் உயிருடன் இருந்தார் என்றும் சொன்னால் எனக்கு கவனம் இல்லாமல் சொல்கிறேன்.

6. இவ்வழக்கு சொத்து சர்வே எண் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது அதனால் தெரியவில்லை. நான் 6 வது வரை படித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனக்கு படிக்கத் தெரியாது. முருகேச மந்திரியின் சொத்தில் வாதிகள் முதலில் பாகம் கேட்டார்கள் என்றாலும் நான்தான் அவர்கள் மீது முதலில் வழக்கு தொடர்ந்தேன் என்றாலும் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது.

7. லத்தேரி காவல் நிலையத்தில் என்னையும் வாதிகளையும் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சொத்துக்காக நான் இவ்வழக்கில் பொய்

சொல்கிறேன் என்றாலும் வாதிகள் தான் முருகேச மந்திரியின் வாரிசுகள் என்று சொன்னாலும் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI